**தலைப்பு 287 – காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 287 – காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 400.30 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 388.99 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 11.31 மில்லியன் அதாவது 2.83 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 377.80 | 369.87 | 7.93 | 2.10 |
| மூலதனம் | 22.50 | 19.12 | 3.38 | 15.02 |
| மொத்தம் | **400.30** | **388.99** | **11.31** | **2.83** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 28701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானவை |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 22.17 | 18.72 | 11.17 | 14.95 | 65.00 | 40.36 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0124/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.007 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 3 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.25 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0087/000 | 0.02 |
| 6000/0000/00/0016/0080/000 | 0.08 |
| 6000/0000/00/0018/0083/000 | 0.15 |
| | 0.25 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

காணி உரிமை நிர்ணயத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகளையும் ஏடுகளையும் பேணாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ii) | வாகனங்கள் நிரல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647((உ) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

14 செலவின விடயங்களுக்காக மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக அச் செலவின விடயங்களின் நிதி ஏற்பாட்டை பயன்படுத்தியதன் பின்னர் சேமிக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 10 சதவீதத்திலிருந்து 59 சதவீதம் வரையான வீச்சுடைய அளவினைக் கொண்டிருந்தது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்றுக்கள்**

28701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 1,218,872 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 1 ஆண்டிலிருந்து 8 ஆண்டுகள் வரையான காலவீச்சினைக் கொண்டிருந்தும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

**3.4 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தினுள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 15 வகை உருப்படிகளில் மிகையும் 36 வகை உருப்படிகளில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன. இப்பற்றாக்குறைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் மிகைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 செயலாற்றல்**

திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) திணைக்களச் செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம்**

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களச் செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

**காணிப் பிரிவு**

| | காணி | செயன் முன்னேற்றம் | செயற்பாடுகளை நிறைவேற்றுதன் சதவீதம் |
|---|---|---|---|
| காணி சிக்கல்களை தீர்க்கும் அறிவித்தல்களை பிரசித்தப்படுத்தல் | 57 | - | 0 |
| காணி சிக்கல்களை தீர்க்கும் கட்ட்டளைகளுக்காக ஏற்பாடுகளை தயாரித்தல். | 32 | 06 | 19 |
| நில அளவையாளர் அதிபதிக்கு அளவீட்டிற்காக அனுப்புதல் | 02 | 08 | 400 |

| | | | |
|---|---|---|---|
| தீர்வுசெய்யும் கட்டளையை காணிப் பதிவாளருக்கு அனுப்புதல். | 07 | 06 | 86 |
| தீர்வுசெய்யும் கட்டளையை அமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்புதல். | 06 | 11 | 183 |
| தீர்வுசெய்யும் கட்டளையை வர்த்தமானியில் பிரசுரித்தல் | 10 | 13 | 130 |
| கிராமங்களை விடுவித்தல் | 20 | 23 | 115 |

காணிகளை விடுவித்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் கிராமங்களை விடுவித்தல் செயற்பாட்டிற்குரிய 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டிருந்த இலக்குகளில் காணி விடுவித்தல் அறிவித்தல்களைப் பிரசித்தப்படுத்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இலக்குகளை தயாரிக்கும் போது முன்னைய ஆண்டில் முன்கொண்டு வரப்பட்ட படிமுறைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளாமை காரணமாக இலக்கிற்கு ஒப்பாக செயன்முன்னேற்றம் உயர்ந்த மட்டத்தில் காணப்படுவதாக நிரூபணமாகியது.

**(ஆ) போதியளவில் நிறைவேற்றப்படாத பணிகள்**

**பிம்சவிய**

பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தில் மீளாய்வாண்டின் போது திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | **இலக்கு** | **செயன் முன்னேற்றம்** | **செயற்பாடுகளை நிறைவேற்றுதன் சதவீதம்** |
|---|---|---|---|
| வெளிக்கள புலனாய்வுகளின் எண்ணிக்கை. | 204,930 | 104,163 | 50 |
| காணிப் பதிவாளர் பரிசோதனைகளின் எண்ணிக்கை | 135,000 | 56,758 | 42 |
| காணி உரிமை நிர்ணயத் திணைக்களம் பரிந்துரைத்த அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை. | 125,810 | 51,475 | 41 |
| வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை. | 125,000 | 53,484 | 43 |
| காணிப் பதிவாளருக்கு அனுப்பியுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை. | 124,000 | 53,584 | 43 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், திணைக்களத்தின் பிரதான செயற்பாடான உரித்துறுதி பதிவுசெய்யும் செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) 2015 ஆம் ஆண்டிற்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய இலக்குகள் 2016 ஏப்ரல் மாதத்தின் போது திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அது நடைமுறைச் சாத்தியமில்லையென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்**

காணிகளை தீர்வுசெய்வதற்குரிய பழைய மற்றும் பெறுமதியான ஆவணங்களை பாதுகாப்பதற்காக செயற்திறனான பதிவேடுகள் பாதுகாப்பு முறைமையொன்றைப் பராமரித்து செல்லும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 107 | 49 | 58 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 06 | 06 | 01 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,747 | 633 | 1,114 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 254 | 151 | 103 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | 126 | - | 126 | - |
| | மொத்தம் | 2,240 | 839 | 1,402 | 01 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 90 உப அலுவலகங்களுக்கு பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 46 அலுவலகங்கள் மாத்திரம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதால் பதவியணி வெற்றிடங்களின் எண்ணிக்கை அதிகளவில் அதிகரித்திருந்தது.

(ஆ) 186 தகவல் தொலைத்தொடர்பு மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான பதவியணியினர் 6 ஆக மாத்திரம் இருந்தது. காணப்படும் உப அலுவலகங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது

போதியளவில் பதவியணி உள்ளபடியாக இருப்பதால் இப்பதவியணியினர் உண்மையாகவே தேவையா மற்றும் அவ்வாறில்லா விட்டால் தேவையான பதவியணி இல்லாமலே செயற்பாட்டை நிறைவேற்றுவது எவ்வாறென்பது தொடர்பாக சிக்கலொன்றாக இருந்தது.

(இ) 91 ஆவணப் பாதுகாப்பு பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருவர் மாத்திரம் காணப்பட்டதுடன், 126 அலுவலக உதவியாளர்களை (ஒப்பந்த அடிப்படையில்) அங்கீகரிக்கும் போது 90 உப அலுவலகங்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்த உப அலுவலகங்களின் எண்ணிக்கைகளை ஆரம்பிக்காததன் அடிப்படையில் இவ்வாறு வெற்றிடங்கள் இடம்பெற்றிருந்ததாக கண்டறியப்பட்டது.

(ஈ) இதன் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக பதவியணியினர் வெற்றிடங்கள் காணப்பட்டமை எவ்வளவு தூரம் தாக்கமளித்திருந்தது தொடர்பாக மதிப்பீடு செய்து காணப்படும் உப அலுவலகங்கள் எண்ணிக்கை ஏற்ப போதியளவு பதவியணியினரைச் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.